**தலைப்பு 210 – அரசாங்க தகவல் திணைக்களம்**

---------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

--------------------------

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

----------------------------------------------

அரசாங்க தகவல் திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 31 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 03 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

-----------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள்

காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதனை பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------------------

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள் தொடர்பாக பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்ஷ

---

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

---

**காசுப்பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டியின் 7.6 ஆம் பந்தியின் பிரகாரம் பணம் மற்றும் குறுக்கு பதிவுகள் இரண்டையும் கருத்தில் கொண்டு காசுப்பாய்ச்சல் கூற்று நேரடி முறைக்கு தயாரிக்கப்பட வேண்டும். எனினும் காசுப்பாய்ச்சல் கூற்று குறுக்கு பதிவுகள் இல்லாமல் காட்டப்பட்டிருந்ததால் ரூபா 3,157,959 தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியான புள்ளிவிபரங்களை உள்ளிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

-----------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | நட்டங்களஹ் மற்றும் சேதங்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு வருகிறது. | நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் அது தொடர்பான படிவத்தின் கீழ் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

---------------------

### 2.1 செலவின முகாமைத்துவம்

-------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நி.பி. 66 மூலம் 09 செலவினக் குறியீடுகளிற்குரிய ரூபா 27,150,000 நிதியேற்பாடுகளை ஏனைய செலவினக் குறியீடுகளிற்கு மாற்றிய பின்னர் ரூபா 82,193,819 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | கொவிட் 19 காரணமாக பல விளம்பர நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்ப்படுத்தாமை, திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்களை முகாமை செய்வதன் மூலம் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல், உத்தியோகத்தர்களை இடமாற்றம் செய்தல், உறுதிச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமை, தேவைப்பாடுகள் ஏற்படாமை, எதிர்பார்த்தவாறு பராமரிப்பு மேற்கொள்ளப்படாமை மற்றும் புதிய கட்டிட நிர்மாணம் இடைநிறுத்தப்பட்டமை என்பன சேமிப்புக்களிற்கு தாக்கமளித்திருந்தன. | மதிப்பீடுகள் சாத்தியமானளவு சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

-----------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2021 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் 7 செலவினக் குறியீடுகளின் கீழ் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 1,162,393 கூட்டுமொத்தமான 15 பொறுப்புகளை தீர்ப்பனவு செய்வதற்கு 2022 பெப்ரவரி வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலவினக் குறியீடு 210-02-2401 இன் கீழ் 2022.04.01 இல் தொலைக் கல்வி நிறுவனத்திற்கு ரூபா 40,000 தொகை செலுத்தப்பட்டது. மீதமுள்ள பொறுப்புக்கள் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முன்னைய ஆண்டுகளிற்குரிய ரூபா 763,252 கூட்டுமொத்தமான ஆறு பொறுப்புக்கள் முன்னைய ஆண்டுகளிற்குரிய பொறுப்புக்களாகக் காட்டப்படாமல் 2022 ஆம் ஆண்டின் வாக்குப்பணப் பேரேடுகளில் பதிவு செய்யப்படும் போது மீளாய்வாண்டிற்குரிய பொறுப்புக்களாகக் காட்டப்பட்டிருந்தன. | அவதானிப்பு சரியானதாகும். வாக்குப்பணப் பேரேட்டை சீர்செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பொறுப்புக்களை சரியாகக் குறிப்பிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | தொகை ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் தொகுதி II இன் XLVIII ஆம் அத்தியாயத்தின் 4:1 ஆம் பிரிவின் 2:2:1 ஆம் உப பிரிவு | - | போக்குவரத்துப் பிரிவிற்கு இணைப்புச் செய்யப்பட்ட பெண் உத்தியோகத்தர் ஒருவர் போக்குவரத்து பிரிவின் கடமை காலத்தில் வாகனங்களை பழுதுபார்ப்பதிலும், கோவைகளை பராமரிப்பதிலும் நடந்ததாக கூறப்படும் முறைகேடுகள் குறித்து நடாத்தப்படும் முதன்மை விசாரணைக்கு உட்பட்டு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிற்கு 2021 நவம்பர் 23 ஆம் திகதிய அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் தற்காலிகமாக விடுவிக்கப்பட்டுள்ளார். எனினும், 2022 மார்ச் 3 வரை அத்தகைய விசாரணை மேற்கொள்ளப்பட்டிருக் | தபால் பிரிவின் சட்ட உத்தியோகத்தர் திருமதி எம்.ஏ.எச். அத்துக்கொரல 2021.09.23 ஆம் திகதிய வெகுசன ஊடக அமைச்சு செயலாளரின் MMI/AD/2/1/- vol i ஆம் இலக்க கடிதத்தின் மூலம் விசாரணையை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டார். | தாபன விதிக் கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | கவில்லை. மேலும் வாகன திருத்தம் மற்றும் சேவைகளை அங்கீகரிப்பதற்கு பொறுப்பாக இருந்த பணிப்பாளர் (நிர்வாகம்) 2021 ஒக்தோபர் 26 இல் வேறு திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். | | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணங்கள் | | | | |
| (i) | நி.பி. 571 | 7,652,315 | அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு அல்லது மீளளிப்பதற்கான காலதாமதமான வைப்புக்கள் தொடர்பாகவும் ஒப்பந்தங்களிலிருந்து ஏற்பட்ட நட்டங்களை அறவீடு செய்வதற்கான ஒப்பந்தங்கள் தொடர்பாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 12 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 7,488,595 பெறுமதியான வைப்புக்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | புதிய ஊடக நிலைய நிர்மாணத்திற்குரிய பிடித்துவைத்தல் பணம் பொது வைப்புக் கணக்கில் காணப்பட்டது. நட்டங்கள் மதிப்பிடப்பட்டு வருகின்றன. 10 இல் 9 உருப்படிகளுக்கு ஏற்கனவே நட்டங்கள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. உருப்படி ஒன்றின் நட்டம் அரச பொறியியல் திணைக்களத்தால் மதிப்பிடப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அத்தகைய பெறுமதி மதிப்பீடுகளை பெற்ற பின்னர் அறவீடு மேற்கொள்ளப்படும். | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நி.பி. 802 (1) | - | திணைக்களத்திற்குச் சொந்தமான ஏழு வாகனங்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 3 மாதங்கள் முதல் 15 | 2021 ஆம் ஆண்டு கொவிட் பரவியதன் விளைவாக கராஜ் (garage) மூடப்பட்டதால் கடமைகளின் | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| | மாதங்கள் வரையான காலமாக விளைவற்றிருந்தன. | வரம்பு காரணமாக வாகனங்களின் ஓட்டம் மட்டுப்படுத்தப்பட்ட துடன் வாகன பழுதுபார்த்தல்களை மேற்கொள்ள முடியவில்லை. |

**2.4 முற்பணங்களை வழங்குதலும் தீர்ப்பனவு செய்தலும்**

---------------------------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இறந்த மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து முறையே ரூபா 159,870 மற்றும் ரூபா 150,700 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020.12.19 இல் இறந்த திரு. பீ.எஸ்.டி. பிரேமசுந்தர அவர்களின் மரணப் பணிக்கொடையிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 159,870 கடன் மீதி மற்றும் 2021.12.31 இல் ஓய்வுபெற்ற திரு. எம்.ஏ. ஜெயசிங்கவின் ஓய்வூதியப் பணிக்கொடையிலிருந்து ரூபா 150,700 தொகை என்பவற்றை இந்த வருடத்திற்குள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பதவி வறிதாக்கப்பட்ட 3 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 211,486 தொகையான கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் 5 ஆண்டுகளிற்கு மேற்பட்ட ரூபா 179,740 கடன் மீதி அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | 1997 ஆம் ஆண்டில் பதவி வறிதாக்கப்பட்ட திரு. ஓ.சீ.எல். சில்வா தொடர்பான ரூபா 123,475 தொகை மற்றும் 2001 ஆம் ஆண்டில் பதவி வறிதாக்கப்பட்ட திரு. எம். ஆரியரத்ன தொடர்பான ரூபா 56,265 தொகை என்பவற்றை அறவீடு செய்வது தொடர்பாக அறிவுறுத்தல்களைப் பெற்ற பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு தகவல் மற்றும் பதிவேடுகளை அனுப்புவதற்கு மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ரூபா | நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

31,746 இடர் கடன் மீதி 2022 மார்ச் இற்கான கணக்குத் தலைப்பு மூலம் தீர்க்கப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**------------------------------**

**3.1 பெறுகை**

---------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 பெப்ரவரி 18 இல் உள்ளவாறு 42 கணனிகளின் தேவைப்பாடு திணைக்களத்தால் இனங்காணப்பட்டுள்ள போதிலும் இது தொடர்பாக இரண்டு சந்தர்ப்பங்களில் கூறுவிலைகள் கோரப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் 2021 மே 31 இல் 3 கணனிகளிற்கும் 2021 ஆகஸ்ட் 25 இல் 39 கணனிகளிற்கும் சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகளின் அடிப்படையில் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஒரு சந்தர்ப்பத்தில் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருக்காததால் விலை உயர்வு காரணமாக 11 கணனிகளிற்காக ரூபா 4,189,600 மேலதிகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. | திணைக்களத்தின் பிரிவுகளுக்காக 52 கணனிகளை கொள்வனவு செய்வதை பணிப்பாளர் நாயகம் அவதானித்திருந்தார். அவசரத் தேவையாகக் கருதி, 2021.05.24 இல் 03 கணனிகளை கொள்வனவு செய்வதற்கு கூறுவிலைகள் கோரப்பட்டன, ஏனெனில் 39 கணனிகள் தொடர்பான பெறுகை நடவடிக்கைகளுக்கு அதிக காலம் எடுத்துக் கொள்கிறது. அதேநேரம் பெரிய பெறுகை பதிலளிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட போதிலும் கொவிட் தொற்றுநோய் காரணமாக உத்தியோகத்தர்களை கடமைக்கு அழைப்பதில் மட்டுப்படுத்தல்கள் இருந்ததால் கூட்டங்களை நடாத்துவதில் சிரமங்கள் காணப்பட்டன. அதன் பிரகாரம் உற்பத்திப் பிரிவிற்கு 03 கணனிகளை பிரதான பெறுகையை விட குறைந்த விலையில் கொள்வனவு செய்ய முடிந்தது. | பெறுகையை மேற்கொள்ளும் போது நிறுவனத்திற்கு அதிக நன்மை கிடைக்கும் வகையில் முடிந்தவரை நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

---

திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட போதிலும் 2022 மே 31 வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்காத கணக்காய்வு ஐயவினாக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) வாகனங்களை பழுதுபார்த்து சேவிஸ் செய்யும் செயன்முறை தொடர்பான பரீட்சிப்பு.<br>(ஆ) வாகனங்களின் கோவைகளை பேணுவதில் உள்ள முறைகேடுகள் தொடர்பான பரீட்சிப்பு.<br>(இ) திணைக்கள சேவையின் விடுவிப்பு தொடர்பான பரீட்சிப்பு.<br>(ஈ) 2021 ஆம் ஆண்டிற்கான அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண ”பீ” கணக்கு தொடர்பான கணக்காய்வு<br>(உ) 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு<br>(ஊ) நிதிக் கணக்காய்வு 2021 | 2022 மார்ச் 07 ஆம் திகதிக்கு பின்னர் அனுப்பப்பட்ட 6 கணக்காய்வு ஐயவினாக்களிற்கான பதில்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றதுடன் தாமதமின்றி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள காலப்பகுதியினுள் பதிலளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. நல்லாளுகை

---

### 4.1 உள்ளக கணக்காய்வு

---

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 (I) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் திணைக்களத்திற்கு உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 யூலை வரையிலும் திணைக்களத்திற்கு உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வாளர் பதவி வெற்றிடமானது பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டு நிரப்பப்பட வேண்டும். குறித்த வெற்றிடத்தை நிரப்புமாறு திணைக்களத்தினால் பல தடவைகள் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும் அந்த பதவிக்கு பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40 (I) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

--------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 330 ஆகவும், உள்ளபடியான பதவியணியினர் 232 ஆகவும் காணப்பட்டது. இதன் விளைவாக 98 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் சிரேஷ்ட மட்டத்தில் உள்ள 06 வெற்றிடங்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | நாடளாவிய மற்றும் இணைந்த சேவையின் வெற்றிடங்கள் தொடர்பாக, பொது நிர்வாக அமைச்சின் இணையத்தளத்தின் PACIS மென்பொருள் மூலம் நாளதுவரையாக்கப்பட்டுள்ளன. உரிய வழிமுறைகளைப் பின்பற்றும் போது ஏற்பட்ட காலதாமதம் காரணமாக சில திணைக்களம் சார்ந்த பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு கால அவகாசம் எடுக்கப்பட்டது. மேலும் 2021.09.21 ஆம் திகதிய MMI/5/7/Com – Vol 1 ஆம் இலக்க வெகுசன ஊடக அமைச்சு செயலாளரின் கடிததத்தின் மூலம் மறு அறிவித்தல் வரும் வரை 2021.09.01 முதல் புதிய ஆட்சேர்ப்புக்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. | தற்போதுள்ள பதவியணி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |